Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 41	கீலக ஹூ ஆனி 1968 ஜூன்	இதழ் 6

கல்வியில் இறை வணக்கம்

ஆசிரியர்

கல்வி நிலையங்களில் வழிபாடு பற்றி இன்று காணப் படுகின்ற ஒருபோக்கு அறிவுடைய யாரையும் கவலை கொள்ளச் செய்யும். கூட்டங்கள் நடக்கும் சமயம் முதலாவதாக, தமிழ் நாட்டின் நீண்ட கால சம்பிரதாயத்தை ஒட்டி, கடவுள் வழிபாடு ஒன்று நடைபெறுகிறது. இது இப்போது இறை வணக்கம் என்று பெயர் சூட்டப் பெற்றிருக்கிறது. இறை வணக்கமாவது, இன்று மேற்கொள்ளுகின்ற செயலோ, விழாவோ, மற்ற எதுவோ இடையூறின்றி நன்முறையில் நடைபெற வேண்டுமென்றும் பல பொருள்களைக் கருதி முடிவு செய்யும் கூட்டமாயிருப்பின், கூட்டத்தினருக்கு வழி காட்ட வேண்டும் என்றும் இறைவனை நோக்கி வேண்டுவதாகும். எப்படியும் இது இறை எண்ணத்தை மனத்தில் தோற்றுவித்து அவனைக் குறையிரத்தல் என்ற பொருள் உடையது.

தமிழ் நாடு கோயில்களின் நாடு; எண்ணற்ற பெருங் கற்கோயில்களைக் கொண்டது. நம் முன்னோரான சோழ மன்னரும் பிறரும், பிற செல்வங்களெல்லாம் அழிவன என்று கருதி, அழியாச் செல்வங்களாகத் தங்கள் பொருள்

அனைத்தையும் மக்களுக்கே செலவிட்டுப் பெருங் கற் கோயில்களை அமைத்து அவற்றைப் பொதுச் சொத்தாக்கி வைத்தார்கள். இவ்வாறு அவர்கள் செய்வதற்கு ஊக்கம் தந்தது, தமிழ் நாட்டில் ஆறு ஏழு நூற்றாண்டு தொடங்கிப் பெருகி வந்த தேவார திருவாசகங்கள் போன்ற அருட் பாசுரச் செல்வம். இப்பாசுரங்களில் ஈடு பட்ட நம்முன்னோர் அனைத்தையும் ஆண்டவன் உடைமை யாக்கினார்கள். தமிழில் இருக்கின்ற அளவு உலகத்தில் வேறெந்த மொழியிலும் அளவில் அதிகமாகவும், நெஞ்சை உருக்க வல்லனவாகவும், பொருள் பொதிந்தனவாகவும், பாசுரங்கள் இல்லை என்பது அறிந்தோர் கூற்று. இப் பாசுரங்களே, பிற்காலத்தில் சோழ மன்னருக்குப் பேருக் கம் தந்து பெருங் கற்றளிகள் எடுப்பித்தன. இங்ஙிலையில் தமிழ் மக்கள் கூடி எந்தக் காரியம் செய்ய முற்பட்ட போதும் அவ்வருட் பாசுரங்களாலேயே ஆண்டவனைத் துதிப்பது வழக்கமாய்க் கொண்டார்கள். இஃது இயல்பே.

சமீப காலத்தில் தமிழ் உணர்ச்சி பெரிதும் வளர்ந் திருக்கிறது. இதைத் தமிழின் மறுமலர்ச்சிக் காலம் என்று பெயர் சொல்லுகிறார்கள். பார்ப்பன விரோதம், வடமொழி விரோதம் என்ற இரு கால்கள் இதில் வந்து கலந்தன. அக்கால்கள் தங்கள் போக்கில் சென்று வற்றிப் போயிருத்தல் நியாயம். ஆனால் துரதிருஷ்டவசமாக தமிழ் வளர்ச்சி என்ற புதிய வடிவத்தைத் தந்துவிட்டன. இதைக் கல்வி நிலையங்களெங்கும் காண்கிறோம்.

பாடப் புத்தகங்களில் இன்று தெய்வத்தைக் குறிப் பிட்டு வணங்குகின்ற பாடல் எவ்வளவு சிறந்ததாயிருப்பி னும், அதைப் பாடத்தில் சேர்க்கக் கூடாது என்பது ஒரு விதிபோல ஆகிவிட்டது. இதற்கு அடுத்தபடி, தெய்வமே வேண்டாம் என்ற நிலை; சிறந்த தேவார திருவாசகப் பாடலைப் பாடக்கூடாது என்ற ஒரு கொள்கையைச் சில ஆசிரியர்கள் கடைப்பிடிக்கிறார்கள். எனினும், வணக்கம் என்று ஒன்று இருப்பதனால், அதற்கென்று பாடல் வேண்டுமே என்பதற்காக, திருக்குறளிலுள்ள கடவுள்

வாழ்த்துப் பகுதியைப் பாடுகிறார்கள். பல்லாயிரக் கணக்கான அருட் பாசுரங்கள் மலிந்த இந்தத் தமிழ் நாட்டில் கடவுள் வணக்கம் என்றாலே திருக்குறளில் கண்ட முதல் பத்துப் பாட்டுதான் என்ற நிலை ஊன்றிவிட்டது, இதை நாடு செய்த துர்ப்பாக்கியம் என்றுதான் சொல்லவேண்டும். (சினிமாப் பாட்டுப் பாடுகின்ற கீழான நிலைபற்றி இங்குப் பேசவில்லை)

இந்தத் தமிழ் உணர்ச்சியாளர் இன்னும் ஒருபடி மேலே செல்வதைச் சமீபத்தில் யாம் கண்டோம். ஒரு கல்லூரியின் ஆண்டு விழாவிற்குச் சென்றிருந்தோம், அங்கே இசைப் பாடல் பாடினார்கள். இசைப் பாடல் என்றால், இசையுணர்ச்சி யுடையவர், கீர்த்தனங்கள் என்று கருதுவர்; சைவ உணர்ச்சி உள்ளவர் தேவார திரு வாசகம் என்று கருதுவர். நடந்தது இதுவொன்றுமன்று இசையுணர்ச்சியுடைய சிலர் அமர்ந்து, துணைக் கருவிகளோடு, திருவள்ளுவ மாலையிலுள்ள 'மாலுங் குறளாய்', 'ஒன்றே பொருளெனின்', 'பூவிற்குத் தாமரையே' என்ற மூன்று பாடல்களை இசையோடு பாடினார்கள். இம்மூன்று பாடல்களும் திருக்குறளைச் சிறப்பிப்பன. திருவள்ளுவ மாலையில இவை இன்னார் செய்தன என்று பெயர் சூட்டப் பட்டிருக்கும். ஆனால் உண்மையில்இந்நூலானது பின்னால் வந்த பெயர் தெரியாத ஒருவர் எழுதி, பல புலவர் பெயரை அமைத்து வைத்த ஒரு போலி நூல் என்பது அறிஞர் பலர் கருத்து; உண்மையும் இதுவே. இப்பாடல்களுக்கும் இசைக்கும் என்ன தொடர்பு என்பது விளங்கவில்லை. தமிழிசை வேண்டுமென்ற பேச்சு பெருகிவிட்டது ஆனால் பொருளைக் கருதாமல் பாடுகின்ற தமிழ்ப் பாட்டுக்கும் வேறு எந்த மொழிப்பாட்டுக்கும் என்ன வேறுபாடு என்பது எமக்கு விளங்கவில்லை.

ஆகவே இறை வணக்கம் என்ற பெயரால் தமிழ் தமிழ் என்று எதையும் பாடலாம், அங்கு இறையும் வேண்டாம், வணக்கமும் வேண்டாம் என்ற போக்கு நம் கல்வி நிலையங்களில் பெருகிவிட்டது. இதைச் சைவ மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும். இறைவனுடைய திரு

வருளைப் பெற்றுப் பூரணமாய் அனுபவித்து, அதன் விளைவாக அருட் பாசுர மழை பொழிந்த அடியவர்களின் பாடல்கள் பல்லாயிரம் இருக்க, பிற பாடல்களை நாம் பாடுவது நம் கலைச் செல்வத்தை வேண்டாம் என்று ஒதுக்குவது போலாகும். முதல் வகுப்பு முதல் பதினொரு வருஷ காலமும், பின்னர் பட்டப் படிப்புக்கு நாலு வருஷ காலமும் கல்விச் சாலையில் செலவிட்டு, ஒரு பாடல்கூடத் தேவார திருவாசகம் அறிய வேண்டிய நிர்ப்பந்தமில்லாமல் பட்டதாரியாக வருகின்ற பையன் இறையுணர்ச்சியின்றி நாஸ்திகனாக இருக்கின்றானே என்று பின்னால் வருந்தி என்ன பயன்? ஆஸ்திக உணர்வு அவனுக்கு வருவதற்கு இத்தனை வருஷ காலமும் பொறுப்புடைய பெற்றோர் என்ன செய்கிறார்கள்?

எனவே, சைவராயுள்ளோர் இதை நன்கு சிந்திப்பார்களாக. பள்ளியில் இறை வணக்கம் என்பது தமிழ் என்ற பெயரால் வெறும் கூத்து ஆகிவிடாதபடி காத்து உண்மையான தெய்வ மணமும் சைவ மணமும் ஆகிய தமிழ் மணம் கமழும்படி செய்ய இன்றே முயல்வார்களாக.

அத்தீச்சுரம்

(மு. அ.)

அத்தீச்சுரம் என்பது வைப்புத் தலங்களுள் ஒன்று. அப்பர் சுவாமிகள் அடைவு திருத்தாண்டகம், ஈச்சுரம் என்று முடிகிற பெயருடைய தலங்களைக் கூறும் எட்டாம் பாடலில் அத்தீச்சுரத்தைக் குறிப்பிடுகின்றார்.

நாடகமா டிடம்நந்தி கேச்சுரம் மாகாளேச்
சுரம் நாகேச் சுரம்நாக ளேச்சுரம் நன்கான
கோடீச்சுரம் கொண்டீச் சுரம்திண் டீச்சுரம்
குக்குடேச் சுரமக்கீச் சுரம்கூறுங்கால்

ஆடகேச் சுரம்அகத்தீச் சுரம்அய னீச்சுரம்
அத்தீச் சுரம் சித்தீச்சுரம் அந்தண்கானல்
ஈடுதிரை இராமேச்சுரம் என்றென் றேத்தி
இறைவனுறை சுரம்பலவும் இயம்புவோமே.

இவ்வத்தீச்சுரம், திருநெல்வேலி ஜில்லாவில் ஆழ்வார் குறிச்சி என வழங்கும் சிவ சைலம் என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். இது பொருத்தமன்று. சோழ நாட்டில் திருக்கலிக்காமூருக்கும் திருவெண்காட்டுக்கு மிடையில் பெருந் தோட்டம் என்ற ஊரில் ஐராவதேசுவரர் என்ற பெயரால் இன்று வழங்கும் சிவாலயமே அத்தீச்சுரம் என்று அறிகிறோம். அத்தி – யானை; வெள்ளை யானை யாகிய ஐராவதம் இங்குப் பூசித்து முத்தி பெற்றமையால் இத்தலம் அத்தீச்சுரம் என்று பெயர் பெற்றது. இத்தலத்திற்கு வன்றொண்டர் மாணுக்கராகிய சொக்கலிங்கச் செட்டியார் "பெருந்தோட்டத்து அத்தீச்சுர புராணம்" என்ற புராணம் பாடியிருக்கிறார். இது 791 பாடல்கள் உடையது.

இடம் : திருவெண்காட்டிலிருந்து சீர்காழி செல்லும் பஸ் சாலையில் 6 பர்லாங் தூரம் சென்று வடபுறம் உள்ள கப்பிச் சாலையில் 2 மைல் தூரம் சென்றால் ஐராவதேசுரர் கோயிலை அடையலாம். வழியில் எம்பாவை என்ற ஊர் உள்ளது. இப்பெயரின் காரணம் விளங்கவில்லை. அடுத்து அகரப் பெருந்தோட்டம் என்ற ஊர், முகம்மதியர் வாழுமிடம்; 200 குடும்பங்கள் உள்ளன. இதை யடுத்து 116 ஏகரா விஸ்தீரணமுள்ள ஒரு பெரிய ஏரி உள்ளது. ஏரிக்கரையோடு சென்றால் பெருந்தோட்டம். கோயில் சாலைக்குக் கீழ்ப்புறமாக உள்ளது. அங்கிருந்து நேரே ஒரு மைல் தூரத்தில் கடல்.

பெயர் : ஊர் பெருந் தோட்டம். கோயிலின் பெயர் ஐராவதேசுரர் கோயில்; சுவாமி ஐராவதேசுரர்; அம்பிகை ஒப்பில்லா முலையம்மை. (அதுலகுசாம்பிகை) தலவிருட்சம் வில்வம் போலும்.

கோயில் : எதிரில் ஒரு திருக்குளம். கோபுரம் இல்லை. வாயிலிலேயே சுவரின் உள்ளே மேற்கு நோக்கியவாறு பைரவர், சனி, சூரியன் அமர்ந்துள்ளனர், விசாலமான பிராகாரம், மண்ணுகவே உள்ளது. நந்தி உயர்ந்த பீடத்தில் உள்ளார். அக்கினி மூலையில் வாதாடும் பிள்ளையார் சிறப்பான விமானத்தோடு கூடிய தனிக் கோயிலில் உள்ளார். கோயில் முழுமையும் பழைய கற்கோயில். 1940 இல் திருப்பணி செய்தபோது கற்களை மாற்றி வைத்தமையால் இருந்த கல்வெட்டுக்கள் சீர்கெட்டுப் போயின. திருவேண்காடு போல இங்கும் முக்குளம் உண்டு.

மூர்த்தி : கோட்டத்தில் முறையே விநாயகர்; இம் மூர்த்தி ஆவூர் நாட்டு எழுகடல் மன்னன் மனைவி வழிபட்ட மூர்த்தி என்றும், இப்பகுதி புத்த சமயம் வழங்கிய காலத்தில் இம்மூர்த்தி தென் கோட்டத்தில் எழுந்தருளுவிக்கப் பெற்ருர் என்றும் வழக்குண்டு. அடுத்து தக்ஷிணுமூர்த்தி மிக அழகிய முகபாவம். நிருதி விநாயகர் தனிக் கோயில். மற்றும் பின்கோட்டத்தில் விநாயகர் இருப்பது புதுமையாக உள்ளது. வேறிடத்தில் இருக்கவேண்டிய விநாயகர் இங்கு கொண்டுவந்து வைக்கப்பெற்ருர் போலும். முருகன் தேவியரோடு, சிறுவடிவம், கஜலக்ஷிமி தனிக்கோயில். வடபுறம் பிரமன், துர்க்கை, சண்டேசர்; அம்பாள் கோயில் அடிப்பக்கம் கல். மேற்பாகம் செங்கல். கோயில் மிக்க விசாலமாக இருந்ததென்றும் காலகதியில் சிலமானபோது கோயிலைக் குறுக்கி அம்பாளை இங்குக் கொண்டு வந்து அமைத்தார்கள் என்றும் சொல்லுகிருர்கள்.

மூர்த்தி நடுத்தர வடிவம். வாயிலில் நான்கு கைகளையுடைய நடுத்தர வடிவமுடைய துவாரபாலகர். வாயிலில் விநாயகரும் முருகரும் சிறிய வடிவங்கள். தென்புறத்தில் மூலவர். மாணிச்க வாசகர், சம்பந்தர், சுந்தரர், அப்பர் வடிவங்கள் உள்ளன. மாணிக்கவாசகர்மட்டும் இருந்த கோலம் : மிகவும் புதுமை. மிகச்சிறிய வடிவம். அம்பிகை நடுத்தர வடிவம்; மிகவும் அழகியது.

உற்சவ மூர்த்திகள் : சம்பந்தர், சண்டேசர், தேவிய ரோடு கூடிய முருகன், சோமாஸ்கந்தர் தனி அம்பிகை, விநாயகர் அனைவரும் உள்ளனர். நடராஜப் பெருமான் மிகவும் அழகான வடிவம். முகபாவம் அற்புதமானது; பேசுவது போலவே இருக்கிறது. முகத்தில் தோன்றும் சிறுநகை "என்று வந்தாய்" என்று கேட்பது போலவே இருக்கிறது. அம்பிகை சிறிது மெலிந்து நீண்ட வடிவம். பக்கத்தில் மாணிக்க வாசகர்.

பாடல் : மேற்குறித்தவாறு அப்பர் பாடல், அத்தீச் சுரப் புராணம்.

வரலாறு : ஐராவதம் துருவாச முனிவர் கொடுத்த பூவைக் காலில் போட்டு மிதித்துப் பெற்ற சாபத்தை இங்கு பூசித்துத் தீர்த்துக் கொண்டது. இது ஓர் அடை யாளச் சித்திரமாகத் தென்புறத்தில் விநாயகரை அடுத் துச் சுவரில் ஒரு புடைப்புச் சித்திரமாய் அமைக்கப் பெற் றுள்ளது. ரிஷியும் இந்திரனும் தேவியும் ஐராவதமும் சில பரிவாரங்களும் உள்ளனர். விநாயகர் இந்திரனோடு வாதாடி அருள்புரிந்த காரணத்தால் வாதாடும் விநாயகர் (தர்க்க கணபதி) எனப் பெயர் பெற்றார். உருத்திரசன்மா என்ற அந்தணன் புதல்வனாகிய ஈசானன் என்பவன் ஊமையாய்ப் பிறந்து இங்கு வழிபட்ட புண்ணியத்தினாலே ஊமை தீர்ந்து பேசும் ஆற்றல் பெற்றான்.

கல்வெட்டு : கல்வெட்டுக்கள் சிதைக்கப் பட்டமையால் புலப்படவில்லை. கருவறையின் வாயிலில் மேற்புறமுள்ள ஒரு கல்லில் மட்டும் ஆலூர் நாட்டு எழு கடல் மன்னன் என்ற வரிகள் காணப்பட்டுகின்றன.

நிர்வாகம் : கோயிலுக்கு ஐந்து வேலி நிலமுண்டு. முருகப் பெருமானுக்குமட்டும் தனியாக நான்கு ஏகார நிலமுண்டு. புதிதாக மூஞ்சூறு, மயில் வாகனங்கள் செய்துவைக்கப் பெற்றுள்ளன.

கைலாயநாதர் கோயில் : இவ்வூரில் மேற்குறிப்பிட்ட வைப்புத் தலம் அன்றி, கைலாயநாதர் கோயில் என்ற ஒரு கோயில் அதன் வடமேற்கில் 6 பர்லாங் தொலைவில் கிராமத்தாரால் அமைக்கப் பெற்றுள்ளது. இதன் கருவறைச் சுவர் இடிந்து வீழ்ந்து கொண்டிருக்கிறது. நுணா முதலான பெரு மரங்கள் இதன்மேலே முளைத்திருக்கின்றன. மகாலிங்கம் மிகவும் அழகான பெரிய வடிவம். தென் கோட்டத்தில் சிறு விநாயகர்; நிருதி விநாயகர்; தேவியரோடுகூடிய சிறு முருகன் கோயில்; லிங்கோத்பவர்; குறுகலான அளவிலமைந்த கஜலக்ஷ்மிக்குத் தனிக் கோயில். வடபுறம் பிரமன், துர்க்கை, சண்டேசுவரர். சுவாமி கோயில், கற்கோயில்; அம்பாள் கோயில் செங்கல். அம்பாள் நடுத்தர வடிவம்; சுவாமி கோயில் முன்புறம் வௌவால் நெற்றி மண்டபம். மண்டபத்தில் விநாயகர் வடிவங்கள் முருகன், பால முருகன் உள்ளனர், உற்சவ மூர்த்திகளில் மிகவும் பழமை பொருந்திய சோமாஸ்கந்தர், உத்திராபதி உள்ளனர். நடராஜ வடிவம் சிறியதாயினும் பழமையானது. அம்பிகையும் அப்படியே; அம்பிகைக்குத் தனி வாசிகை உண்டு. சுவாமி கைலாயநாதர், அம்பிகை நீலாயதாக்ஷி. நாகையிலும் அம்பிகை பெயர் நீலாயதாக்ஷி என்பதை நோக்க நாகையில் உள்ளமைபோல இங்கும் மரக்கலமேறிச் சென்று மீன் பிடித்தும் வாணிபம் செய்தும் வந்தோர் இருந்தனர் என்றும், அவர்கள் நாகை நீலாயதாக்ஷி போலவே இந்த அம்பிகையையும் கருதிக் கொண்டாடி அருள் பெற்று வந்தார்கள் என்றும் நாம் யூகிக்கலாம்.

கோயிலின் தென்புறத்தில்தான் வாயில். கோயில் ஊருக்கு வடக்கே தனியாக உள்ளது. வழியில் குளம், குளத்தை அடுத்து மதிலை ஒட்டி ஒரு கிணறு உள்ளது. ஊரில் எல்லா நீரும் உப்புநீராயிருக்க இவ்வொரு கிணற்று நீர்மட்டும் நல்லநீர். அனைவரும் இதையே உபயோகிக்கிறார்கள். கோயில் சிலம். மதில் சுவர் முழுமையும் வீழ்ந்துவிட்டது.

ஆதிகேசவப் பெருமாள் கோயில்

மிகவும் சிலமாகி இடிந்து போயுள்ள ஒரு பெருமாள் கோயில் இவ்வூரில் இருக்கிறது. மூலவர், உற்சவர், தேவியர், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், உடையவர், சேனை முதலி ஆகியோர் வடிவங்கள் உள்ளன. சிறப்பு, திருமங்கையாழ்வாரும் அருகில் குமுதவல்லியும் உள்ள இரு தனி வடிவங்கள். திருமங்கையாழ்வார் கையில் ஈட்டி; ஓர் அணிகலமுமின்றியுள்ள ஆழ்வாரைப் பார்த்தால் உண்மையாகவே ஒரு வேடன்போல் அழகாகக் காட்சி தருகிறார். பெரிய வடிவம், மிகவும் சிறப்பானது. எதிரில் ஒரு மனிதன் நிற்பது போலவே தோன்றும், இம்மூர்த்தியை வேறிடங் கொண்டுபோவதற்கு முயற்சி செய்தார்களென்றும் ஊரார் முயற்சியால் அது தடைபட்டது என்றும் அறிகிறோம். திருமங்கையாழ்வார் வடிவம் பார்க்கத்தகுந்தது.

தெளிவில் பிறந்த இரு சுடர்கள்

(கா. சிவகாமி எம்.ஏ., உதகை)

உலகில் பல்லாயிரங்கோடி உயிர்கள் பிறந்துமன்று இறுதியில் காலவட்டத்தில் மறைந்து படுகின்றன. பிறப்பென்னும் பேரிருளைப் பிரிந்து செல்கின்ற உயிர் இறப்பென்னும் பேரிருளை அடைவதற்குள் இடையில் உழல்கின்ற பாட்டையைத்தான் நாம் வாழ்க்கை என்று கூறுகின்றோம். ஒரு வட்டத்தின் தொடக்கம் எப்புள்ளியில் நிலைபெறுகின்றதோ—அப்புள்ளியிலேயே அதன் முற்றும் அமைந்திருத்தல் போல இருளைக் கிழித்துப் பிறந்த 'கதிர்' இருளிலேயே மடிவது போல, வாழ்க்கை என்பது பிறப்பென்னும் இருளிற் பிறந்து, இறபபென்னும் இருளில் முடிந்து படுகின்றது. இங்ஙனம் தோன்றி முடிகின்ற வாழ்க்கை வட்டத்தின் தன்மையை உணராது உயிர்கள் துன்புறுகின்றன. தோன்றிய எதற்கும் 'முடிவு' உண்டு. ஆனால் முடிவிலேயே தோற்றமும் உண்டு. இதுதான் இயற்கையின் வியப்பான பெரு நியதி!

கண்ணுக்குத் தெரியாத நுண்ணணு உயிர்களிலிருந்து பூதகரமான உடலங்களைப் பெற்ற உயிரினங்கள்வரை—எல்லா உயிர்களும் இந்தக் கால வட்டத்தில் மாறி மாறிப் பிறந்துறுகின்றன. இப்பிறவிகளில் 'மன உணர்வு பெற்ற மானுடப் பிறப்பே தலைசிறந்தது. இயற்கை வியதிகளை யெல்லாம் உற்று நோக்கி, 'இவற்றிற்கெல்லாம் காரணம் யாது?' என ஆராய்ந்து—காரணத்தை உணர்ந்து, அக் காரணத்தோடு கலப்பது, என்ற பேரமைப்பு இம்மானுடப் பிறப்பிற்றான் நிகழவியலும். எனவேதான் "இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ ஏது நிகழுமோ" என்று தாயுமானுர் கசிந்துருகுகின்ருர்.

ஆனுல் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இச் சாதனத்தை அவன் புரிந்து கொள்கின்ருனு? இப்பிறவி தப்புவதற்குள் பிறவா நெறிக்காகப் பாடுபடுகின்ருனு? இல்லை! கோடானுகோடி மனிதர்கள் உலகியல் நெறியிலேயே உழன்று "இருள்சேர் இருவினையின்" காரணமாகச் "செம்பொருள்" காணுது ஒழிகின்றனர், இத்தீவினை யாளர்களை உய்விக்க வேண்டிப் பல நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு 'செம்பொருள்' கண்ட சான்ருேன் தோன்றுதலை வரலாறு நமக்குச் சுட்டுகின்றது. அங்ஙனம் தோன்றியவர்களில் முதன்மையானவர்களே திருவள்ளுவரும் சிவநெறி கண்ட செம்மையாளர்களுமாவர்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர், மெய்கண்ட சாத்திரங்களான சித்தாந்த சாத்திரங்கள் தோன்றிச் சிவநெறி கூறும் சித்தாந்தத்தை முறைப்படுத்துதற்குப் பன்னூருண்டுகட்கு முற்பட்டவராவார். எனினும் இந்திய நாட்டிலேயே காலத்தால் முற்பட்டது எனவும், உயர்ந்த சிந்தனையின் தெளிவு எனவும் பலபடியாக மேல்நாட்டு

அறிஞர் 1பெருமக்களாலும் போற்றிப் புகழப்படுவதும், தமிழரின் தனிச் சொத்து2மான சைவ நெறியுட்பட்டவரே அவர் என்பது திருக்குறளை நன்கு கற்றவர் உணர்ந்த உண்மையாகும்.

---

1 a. "The worship of Civa is one of the oldest and most widely spread in India." —Pai.
-'Monograph on the Religious Sects in India among the Hindus'

b. "The Saiva Siddhanda represents the high water mark of Indian thought and Indian life."
-Rev. W. Goudie, C.C. Magazine.

c. "A system which perhaps from the theistic point of view is the most valuable of all that have sprung upon the Indian soil."
-Rev. N. Macnicol, Indian Theism.

d. "No cult in the world has produced a richer devotional literature or one more instinct with brilliance of imagination fervour of feeling and grace of expression." -Dr. L. D. Barnett; Heart of India.

e. "Saivism is the most ancient faith in the world."
-Sir. John. Marshall.

f. "Saiva Siddhanta may be ranked among the perfect and cleverest system of human thought."
-Dr. Kamil Zvilabil.

2 "The Saiva Siddhanta philosophy of South India is one of the classical products of the Tamil mind."
"Saiva Siddhanta is predomianantly a Tamil Philosophy."
-John. H. Piet, A Logical Presentation of the Saiva Siddhanta philosophy.

"The Saiva Siddhanta system is the most elaborate influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South Indian and Tamil Religion.
Dr. G. U. Pope.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலே' செந்நெறியடையப் போதுமானது என்று நினைந்தே திருவள்ளுவர் உலகிற்கெல்லாம் பொதுமையான ஒரு நூலைத் தந்தருளினார். இறைவன் கொடுத்த இயற்கைக் கூறுகளை அளவோடு அனுபவித்து, "மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்"1 என்ற திருவாக்கிற்கியைய இல்லறத்தானே இன்பப் பேற்றினை அடைய இயலும் எனக் கருதி, உலகியலிலே உழலும் மாந்தர்க்கு, அவ்வுலகியற்பாற் பட்ட இல்லறத்திலேயே நல்லறம் கூறி நூல் செய்தனர் திருவள்ளுவரெனில் சாலப் பொருந்தும். அதாவது மாந்தர் எளிதிற் பின்பற்றி மேல்நிலை யடைய உலகியல் முறையிலேயே அன்பைப் பெருக்கி அறத்தை வளர்க்கும் மார்க்கத்தைக் தந்தருளினார். எனவே திரு.வி.க. அவர்கள் கூறுகினறபடி வள்ளுவரை "எல்லாச் சமயங்களினின்றும் தனித்தும், எல்லாச சமயங்களிலும் ஊடுருவியும் எல்லாச் சமயங்களும் சேர்ந்த ஒன்றாகவும் இலங்கும் சைவத்"2துட் படுத்துவது தவறாகாது. தனித்தமிழ்ச் சொத்தாகிய சைவத்தில் வள்ளுவனாருக்கும் பங்கு உண்டு அல்லவா?

தமிழகத்தில் சமண பௌத்த மதங்கள் புகுவதற்கு மிக முன்பே சிவ வழிபாடு இருந்து வந்திருக்கிறது. 3 சங்க நூற்களும், ஏனையவும் நமக்குச் சிறந்த சான்றுகள் நல்குகின்றன. புறநானூற்றில் வருகின்ற, 4"முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே", 5"கறைமிடற் றண்ணல் காமர் சென்னி", 6"நீலமணிமிடற்று ஒருவன் போல", 7"நீணிமிர் சடைமுது முதல்வன்" 8 'மாற்றருங்கணிச்சி

1. திருமந்திரம் – 47
2. சைவத்தின் சமரசம், பக்கம் 29
3. சைவ சமய வளர்ச்சி, பக்கம் 13 to 42
4. புறம் – 6
5. ,, – 55
6. புறம் – 91
7. ,, – 166
8. ,, – 56

மணிமிடற்ரேன்'' என்பன போன்ற அடிகளானும், அக நானூற்றில், 'நான்மறை முது முதல் முக்கட் செல்வன்'' எனவரும் குறிப்பினுனும், மதுரைக் காஞ்சியுள், ''மழு வாள் நெடியோன் தலைவனுக'' என வருதலானும், மலை படுகடாத்துள்,

''பேரிசை நவிரம் மேஎ யுறையும்
காரி யுண்டிக் கடவுளது இயற்கையும்''

எனவரும் அடிகளானும், ஐங்குறு நூற்றுள், 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்'' என வருதலானும் சங்க காலத்திலேயே சிவ வணக்கம் உண்டு என்பது தெளிவாகின்றது.

மேலும் சங்கம் மருவிய நூல்களாகக் கருதப்படும், கலித்தொகை, பரிபாடல், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றும் சிவ வழிபாட்டுக் குறிப்புகள் காணப் படுகின்றன. கற்ரேர் ஏத்தும் கலித்தொகையுள், 1''தொடங்கற்கண் தோன்றிய முதியவன்'', 2 'இமைய வில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்'', 3''ஆனேற்றுக் கொடியோன்'', 4''ஆலமர் செல்வன் அணிசால் பெரு விறல்'', 5''கொலைவன் சூடிய குழவித் திங்கள்'', 6''பிறை நுதல் முக்கணுன் உரு'', 7''பெரும் பெயர்க் கணிச்சி யோன் மணி மிடற்றணி'', 8'மணமலர்க் கொன்றை யவன்'', 9 'அரும் பெறல் ஆதிரையான்'', எனவரும் அடிகளானும், பரிபாடலுள், 10''காஅய் கடவுள்'', 11 ''ஆதிரை முதல்வன்'', 12' 'தளிஙிலைச் சல தாரி'' என வரும் குறிப்புகளானும், சிலப்பதிகாரத்துள்,

---

1. கலி 2
2. கலி 38
3. ,, 26
4. ,, 81
5. ,, 103
6. ,, 104
7. ,, 105
8. ,, 142
9. ,, 180
10. பரி – 5 வரி 13
11. ,, – 8 ,, 6
12. ,, – 9 ,, 6

13"பிறவாயாக்கைப் பெரியோன் கோயில்", 14"நுதல்விழி நாட்டத்திறையோன்" என வருதலானும், மணிமேகலையுள், 15'நுதல்விழி நாட்டத்திறையோன் முதலாய்" எனச் சிவனுக்கு முதன்மை கொடுத்துப் பேசப்படுதலானும் இஃது உணரப் பெறுகின்றது.

இந்நூற்களில் 'சிவன்' என்ற சொல் காணப்படாவிடினும் சிவ வணக்கம் இருந்தமையை மேலே கண்ட குறிப்புகளான் உணர முடிகின்றது. மணிமேகலையுள், 'சமயக்கணக்கர் தந்திறங் கேட்ட காதையுள்' சைவ வாதி பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. 16 சிவநெறி என்பதே சைவ நெறி என்று வந்திருக்க வேண்டும். 17எனவே 'சிவன்' என்ற சொல் மணிமேகலைக்கு முன்பே வழங்கியிருக்க வேணடும். இனிச் 'சிவம்' என்ற சொல் 'செம்மை' என்பதன் அடியாகப் பிறந்த தென்பதே அறிஞர் முடிபு. 18இச் சிவமாகிய 'செம்பொருளின்' முதல் நிலையை நாம் வள்ளுவத்தில் காணலாம்.

19" பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு."

20" இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்."

---

13. சிலப்பதிகாரம் வரி 586
14. ,, ,, 2119
15. மணிமேகலை வரி 154
16. மணிமேகலை வரி 3575
17. சைவ இலக்கிய வரலாறு பக்கம் 19
18. தமிழர் சமயம் பக்கம் 45
19. குறள் – 358, 20. குறள் – 91

இச்செம்பொருளாகிய சிவத்தைத் தான் மாணிக்க வாசகரும், 21 "செம்பெருமானே சிவபுரத்தரசே", 22 "செம்பொருட்டுணிவே சீருடைக்கழலே", 23 "செம்மையேயாய சிவபத மளித்த செல்வமே" என்ற அடிகளால் தம் திருவாசகத்துள் குறித்துச் செல்லுகின்றார்.

மோனச் சிவமான இச் செம்பொருளையே இராமலிங்க வள்ளல், 1 "செம்மையெலாம் தரும்மௌன அணைமேற் கொண்டு" எனப் பாடுகின்றார். சித்தருக்குச் சித்தரான திருமூலரும் 2 "செம்மைச் சிவமேரு" எனக் குறிக்கின்றார். இனிச் சித்தாந்த சாத்திரங்களுக்குட்பட்ட வினா வெண்பாவிலும், திருவுந்தியாரிலும்,

3 " அருளால் உணர்வார்க் ககலாத செம்மைப்
பொருளாகி நிற்கும் " எனவும்,

4 " சென்ற நெறியெல்லாம் செந்நெறி யாம்படி
நின்ற பரிசறிந் துந்தீபற" எனவும்

குறித்துச் செல்லலைக் காணலாம்.

" ஒருருவம் ஒரு நாமம் ஒன்றுமில்லா " இச்செம்பொருளுக்கு, "ஆயிரம் திருநாமம்" சொல்லுகின்ற உலகில் பொதுமையைச் சைவம் பேசும் சமரசத்தை உணர்த்த வேண்டி, வள்ளுவர் 'பதியை' இறையென்றே சுட்டிப் பாடுகின்றார். எனினும், 'தென்னாடுடைய சிவக் கருத்தாகிய' இறையுண்மை, உயிருண்மை, மலத்தாணும் பிறப்புண்மை ஆகியவற்றையே தம் நூலுள் திருவள்ளுவர்

---

21. வாழாப்பத்து – திருவாசகம்
22. பிடித்த பத்து – திருவாசகம்
23. பிடித்த பத்து – திருவாசகம்
1. திருவருட்பா – மகாதேவமாலை
2. திருமந்திரம் – 2415
3. வினா வெண்பா – 13
4. திருவுந்தியார் – 36,

முதன்மையாகக் கொண்டு செல்லுகின்றார். எனவே, உலகிற்குப் பொதுமையை உணர்த்திய சைவமே இவரது சார்பு என்பதில் யாரும் ஐயுறல் வேண்டுவதில்லை.

“காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப் போல்” அலமருகின்ற மானிட சமுதாயத்தின் ‘இருள்கடிய’ எழுந்தது திருவள்ளுவம். அதே போல், முப்பாழும் பாழாய் முதற்பாழ் வெறும் பாழாய், அப்பாழுக் கப்பாலே, ஆனந்த நடனமிடும் சதாசிவமும், அதன் இரகசியமும் இன்னது எனக் காட்டச் சான்றோர் சிலர், ‘சித்தாந்த சாத்திரங்களைச் செய்தனர். ஆக இவ்விரு சுடர்களும் தமிழ்மையின் இரு விழிகளெனில் மிகையன்று. தெளிவிற் பிறந்த இவ்விரு சுடர்களையும் ஆய்தல் தமிழராவார் தம் கடமையாகும்.

திருமந்திரம் அரியவுரை

(வித்துவான் அம்பை சங்கரனார்)

ஒன்றே கலப்பை யுழப்பெரு தைந்துள்ள
ஒன்றே நினைந்திட் டுழப்புகி லோடிப்போம்
என்றே நினைந்திட் டுழுதுண்ண வல்லார்க்
கன்றேநட் டன்றே யறுத்துண்ண லாமே.

(என்பது) வேதத்துக்கு ஆதியும் அந்தமுமான பிரணவத்தை மெத்தெனக் கலப்பமென்றான பதார்த்தத்தைப் பொருந்தப் பார்க்கிற பஞ்ச வாயுக்களாகிற வெருதுகளிற் கூடாமல் நீங்கா நின்றது. இவை நீங்காதபடியாகச் சுழிமுன்னாடியிலே பிரணவத்தைச் செலுத்தின் இதுதானே சொயம்பிரகாசத்தை நட்டுப் பிறவியை யறுத்து அமுதபோகத்தைப் பொசிப்பிக்குமே யென்று பிரணவத்தின் பெருமையை வியந்து சொல்லியது.

ஒன்றே கல என்பது வேதங்களெல்லாமாதியும் அந்தமுமாய் நிற்கிற பிரணவ மாகிற ஒன்றே கல.

பை என்பது பையப்பைய என்றபடி

உழப்பெருதைந்துள என்பது பிடிபடாமற்றிரிகிற பஞ்ச வாயுக்களாகிற வெருது உண்டென்றபடி.

ஒன்றே நினைந்திட்டுழப்புகி லோடிப்போம் என்பது ஒன்றான பரமசிவனை யேயும்படியாக நினைந்திட்டுச் செலுத்தப் புகில் விட்டுப்போ மென்றபடி.

ஒன்றே நினைந்திட் டுழுதுண்ண வல்லார்க்கு என்பது சுழிமுனைநாடியிலே பொருந்தும்படியாக நினைந்திட்டு ஆகுஞ்சனத்தாலே செலுத்தி யமுதத்தை யுண்ண வல்லார்க்கென்றபடி.

அன்றே நட் டன்றே யறுத்துண்ணலாமே என்பது அப்பொழுதே சுயம்பிரகாசத்தை நட்டு அன்று தலைப் பொருந்துகிற பிறவியை யறுத்துப் பரமானந்த சுகத்தைப் பொசிக்குமே யென்றவாறு.

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப்பதிப்பு முதலிய சில பதிப்புகளில் காணப்பெறவில்லை.

மடைதலை வாய்க்கொண்ட மாருத முன்னீர்
கடைமடை தாங்கிக் கலக்க நிறுத்தி
யுடைமடை தாங்கி யுயிர்முனை யோம்பி
நடைமடை தாங்கென்று நந்திவைத் தானே.

(என்பது) சிரசினுடைய முடிவிலே நின்றுங் கண்டமாகிற மடையிலே தலைகொள்ளும்படி காற்றோடே கூடி வருவதான அஞ்ஞதி செலு மிடா பிங்கலையிற் போகாமல் சுழிமுனைநாடியிலே மண்டலங்களாறிலே பரப்புவதுமாய் சுக்கிலமும் பிராணனும் நீங்காதபடியுமாக நம்முடைய பக்கலுண்டான அக்கினிதானே செய்து முடிப்பதாக வொரு வசனத்தை நமக்கு விட்டானே யென்று குரு வசனத்தின் பெருமையை வியந்து சொல்லியது.

மடைதலைவாய்க் கொண்ட மாருதமுன்னீர் என்பது கண்டமாகிற மடையிலே வாய்க்கொள்ளும்படியாக வீணை தண்டாகிறவரைத் தலையிலே நின்றும் கரத்தோடே கூடி வருவதான அனுதி காலத்திலுள்ள செலமென்றபடி.

கடைமடை தாங்கிக் கலக்க நிறுத்தி என்றது பிரணையரிக்கையே தொழிலான இடா பிங்கலை வழியிற் செல்லாமல் சுழிமுன்னுடியிலே நிற்கிற மண்டலங்கள் ஆறிலே பரவும்படி நிறுத்தியென்றபடி.

உடைமடை தாங்கி யென்றது கெற்பக் கொள்கையாகிற குழியிலே விழும்படி யுடைத்துப் பாய்கிற சுக்கிலத்தைத் தாங்கிக் கொண்டென்றபடி.

உயிர்முனையோம்பி யென்றது ஆயுவானது மேலே வளரும்படியாக ஆகுஞ்சனமானது பேணிக் கொள்ளும் என்றபடி.

நடைமடை தாங்கென்று நந்தி வைத்தானே யென்றது வழிபாடு குன்றுமல் அரும்பாமல் உள்ள அக்கினிதானே நடத்தும்படி குருவானவன் உபாயமாகிற வசனத்தை விட்டானென்றவாறு.

(குறிப்பு) இச் செய்யுளும் சமாஜப் பதிப்பு முதலிய சில பதிப்புகளில் காணப்பெறவில்லை.

மந்திர மொன்றே மலரி லுதிப்பது
உந்தியின் கீணின் ஞெருக்காலு தஞ்செய்யுஞ்
சந்தியி னின்ற தலைவனைச் சாவதற்
கந்தியி னின்று ரயர்கின்ற வாறே.

(என்பது) அக்கரமொன்றுதானே அதோ முகமான வாயுவை.........வற்றுமாயிதுவே வழியாக மேலான பரமசிவனைத் தெரிசிப்பிக்க வற்றுமாயருக்க விவ்வாக்க மொன்றையு நிருபித்தறியாதே திரிசந்தியிலும் பலபல மந்திரங்கள் கொண்டு செபித்துத் திக்குகடோறுந்தொழுது எது பொருளென்றறியாதே மயங்குகின்றுர்களே யென்று அஞ்ஞானரை நோக்கி நொந்து சொல்லியது.

மந்திரமொன்றே மலரிலுதிப்பது என்றது பிரணவமான எழுத்தொன்றுமே மலரையில்லாகவுடைய வக்கினியை யுதிப்பிப்பது என்றபடி.

உந்தியின் கீழ் நின்று ஒருக்காலுதஞ் செய்யும் என்றது இதுதான் ஏகாந்தத் தானத்திலே நின்றுங் கீழ் நோக்கி வியாபரிக்கிற அபானன் என்கிற வாயுவை மேலே செல்லும்படி தள்ள வற்ருயிருக்கு மென்றபடி.

சந்தியின் நின்ற தலைவனைச் சார்வதற்கு என்றது நாற்சந்தியான கபால மத்தியத்திலே நிற்கிற பரமசிவனை வழிபாடுணர்ந்து சென்று ஒருவரு மறிகிருர்களில்லை யென்றபடி.

அந்தியின் நின்ரு ரயர்கின்றவாறே என்றது திரிசந்தியிலும் அநேக மந்திரங்களைச் செபிக்கிற பெரியோர்களும் இந்த வக்கர மொன்றின் பெருமையை அறியாம லயர்கிற படியே என்றவாறு.

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப் பதிப்புள் வேறு விதமாகக் காணக்கிடைக்கிறது. அது வருமாறு:—

மந்திரம் ஒன்றுள் மலரால் உதிப்பது
உந்தியி னுள்ளே உதயம்பண் ணுநிற்கும்
சந்திசெய் யாநிற்பர் தாம தறிகிலர்
அந்தி தொழுதுபோ யார்த்தகன் ருர்களே.

எங்கே இயங்கினும் பூரி யிடத்திலே
அங்கே யதுசெய்கை யார்க்கு மரிதென்று
கொங்கே பிடித்திட் டிலாடத்தி லேசெலச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே.

(என்பது) யோகஞ் செய்யுமளவி லோரிடமாக வோரிடத்திலேயிருந்து ரேசகபூரக கும்பகஞ் செய்ய வேணும். இது கிலேச மொழியச் சரீர சித்திக்கிடையாது எங்கே வியாபரிக்கினும் பிரணவ அட்சர மொன்றையும் சுழி முன்னடியிலே பூரிக்கையறிதலிதுதானே சித்தியுமாய் இவ்வட்சரந்தன்னைக் கண்டத்திலேயுறச் சங்கநாதங்கிள

ரும்படி இலாடமத்தியம் வழியாக வமுதத்துக் கிடமான சிரசினுடைய முடிவிலே கொழுவிக்கிலிது பரமசிவனைத் தெரிசிப்பிக்க வற்றாயிருந்ததென்று வியந்து சொல்லியது.

எங்கேயியங்கினும் பூரியிடத்திலே என்றது பலருடன் கூடியிருக்கினும் தனித்தனியிருக்கினும் போக்குவரத்து செய்யிலும் எப்பொழுதும் சுழிமுன்னுடியிடத்திலே பிரணவாட்சரத்தைக் கொண்டு வாயுவாலே பூரித்துக்கொள்ளென்றபடி.

அங்கேயது செய்கை யார்க்கு மரிதென்று என்றது அகார வுகார மகாரங்களாலே ரேசக பூரக கும்பகஞ் செய்யுமளவி லாதனம் வழுவாமல் ஓரிடத்திலேயிருந்து நாசியைத் தொட்டுக் கிரிகையை நடத்தவேணும் அதில் முன்பு சொன்ன வழிபாடு செய்கையரிதல்ல வென்றபடி.

கொங்கே பிடித்திட்டிலாடத்திலே செலச் சங்கே குறிக்கத் தலைவனுமாமே என்றது அமுதத்துக் கிருப்பிடமான சிரசினுடைய முடிவிலே யிலாடமத்தியம் வழியாகச் சங்கத் தொனி போலும் நாதஞ் செல்லும்படி கண்டத்தை யுற்றிவ் வட்சரத்தாலே குறிக்கிற் பரசிவனு முடைத்தாமென்றவாறு.

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப் பதிப்புள் சிறிது மாறுபட்டுக் காணக்கிடைக்கிறது. அது வருமாறு:—

எங்கே யிருக்கினும் பூரி இடத்திலே
அங்கேயது செய்ய ஆக்கைக் கழிவில்லை
அங்கே பிடித்தது விட்டள வுஞ்செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே

மூக்கினிற் காலாட்டி மூன்றினிற் கைகூட்டி
நாக்கினி லிச்சூட்டி நல்ல வமுதூட்டித்
தேக்கினை யூட்டிச் சிவமந் திரமூட்டி
யாக்கையி னூட்டிடும் அல்லும் பகலே.

(என்பது) சுகாதனமாக விருந்து இரண்டு கையும் இலிங்கத்துக்கு மேலாக நெகிழாமல் மலாத்தி வைத்து வாயுவை மெத்தென நாசியிலே சொருகியும் தந்தத் தாலோட்டங்களிலே யுறும்படி யோசைபடவுள்ளேவாங்கி யத்தாலுண்டான வமுதத்தைப் பொசித்தும் பிரணவங் கொண்டு வாயாலே பூரித்துமாக இவ்வழிபாடு மூன்று நாடி களிலே பரப்பும்படி பொறுக்கு மளவு முள்ளே பூரித்துக் கொள்ளுதல் கிரியா யோகம் என்றபடி.

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப் பதிப்பு முதலிய வற்றில் காணப்பெறவில்லை.

வலைகொண் டறுவர் வணங்கிமுன் னிற்கக்
கலைகொண்டோ ரைவர் கலந்துட னிற்க
விலைகொண்டு நால்வர் நிலாவினுள் நிற்கச்
சிலைகொண் டிருவர் செழும்பதி காத்தே.

(என்பது) ஆதித்தனும் அக்கினியுமாகிற விருவரும் வீணுதண்டாகிற சிலையைக் கைக்கொண்டு சுழிமுன்னுடி யாகிற நாணியை யேற்றிக் குருவசனமாகிற பகழியைத் தொடுத்து நாடியாகிற வலையை வாயுவாலே கட்டுவித்து ஐம்புலனுகிற மிருகங்களையும் சந்திரனுகிற வம்புலியையும் மேவிலே படும்படி வேட்டையாடாதே வீடுகாத்திருக்கும் படி விட்டார்களே யென்று அஞ்ஞானரைத் தூஷித்தல்.

வலைகொண்டறுவர் வணங்கி முன்னிற்க என்றது,

"ஜாயதே ஸ்திஷப்ரணமதே விபக்வி யதே இனஸ்திதி"

என்கிற அரவத்தையு முடைமையாக வுடைய சரீரம் எழு பத்தோராயிரத்தறுநூறு நாடியாலே கட்டுண்ணப்பட்ட வலையை யேரட்டுக் கொண்டு உச்சரித்து வளையும் படியாக வாயுவானவன் முன்னிற்க வென்றபடி

கலைகொண்டோரைவர் கலந்துடன் நிற்கவென்றது ஓரிடத்திலே நிலையில்லாமல் கலைத்துக் கொண்டு திரிகிற ஐம்புலனுகிற மிருகங்களும் நிற்க வென்றபடி.

நிலைகொண்டு நால்வர் என்றது மானுதி பரன் நால் வரு மிவையத்திடைய நிலைபாடு கண்டு நிற்கவென்றபடி

நிலாவினுள் நிற்க என்றது நிலாவாகிற வம்புலியு முள்ளே யகப்படும்படி நிற்க வென்றபடி

சிலைகொண்டிருவர் செழும்பதி காத்தே என்றது ஓரி டத்திலே நிலையில்லாமல் கலைந்து கொண்டு சுழி முன்னுடி யாகிற நாணியை ஏற்றிக் குருவசனமாகிற பகழியைத் தொடுத்து முன்பு சொல்லப்பட்ட மிருகங்களையும் அம்பு லியையும் விழ வெய்து கொண்டு சுகம் பாராமல் வீடுக் கொத்திருந்து விட்டார்களே என்றவாறு.

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப்பதிப்பு முதலிய வற்றில் காணப்பெறவில்லை.

முருகன் தத்துவம்

-:(மா. ப. தியாகராஜன் பி.ஏ.):-

தத்துவம் என்றவுடனே சிலர் புரிந்து கொள்ள முடியா ததென எண்ணி விடுகின்றனர். புரிந்து கொள்ள முயல் வதுமில்லை. அப்படிப் புரிந்து கொள்பவர்களும் உண்மை வரலாற்றை ஐயப்படுகின்றனர். உதாரணமாக "முப்புர மெரித்தது மும்மல காரியம்" என்ற திருமூலர் வாக்கைப் படித்ததும் முப்புரம் எரித்த வரலாறு பொய் என முடித்து விடுகின்றனர். திருநீறு நிலையாமையை உணர்த்துகிற தெனின் திருநீறு இல்லையெனக் கூறி விடலாமா? "ஊனு டம்பாலயம் வாய் கோபுரவாசல்" என்று கூறுவதால் ஆலய மின்று கோபுர வாயில் வேண்டுவதில்லை என்ற முடிவுக்கு வந்து விடலாமா? அதுபோல முருகன் தத்துவத்தை உணர்வதால் கந்தபுராணமும் பொய் என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இனி முருகன் அவதாரம், அவன் செய்த

லீலைகள், சூரனை உய்வித்தது, வள்ளியைத் திருமணம் செய்து கொண்டது இவற்றின் தத்துவங்களை ஆராய்வாம்.

கந்தர் கலிவெண்பாவில் முருகன் திரு அவதாரத்தைக் கூறுமிடத்து, "ஐந்து முகத்தோடதோமுகமும் தந்து திரு முகங்களாறுகி செந்தமற கண் ஆறும் தீப்பொறியா றுய்ப்ப" என்று தொடங்குகிறார். சிவபெருமானுக்கு ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என ஐந்து முகங்களிருப்பதாகவும்; அவற்றுள் ஈசானம் ஆகாயத்தைக் குறிப்பதோடு அறிவைக் கொடுப்பதெனவும், தத்புருஷம் கிழக்குத் திசையைக் குறிப்பதோடு, உயிர்களுக்கு உடலைக் கொடுக்குமெனவும், அகோரம் மேற்குத் திசையைக் குறிப்பதோடு உயிர்களைப் பாசத்திலிருந்து பண்படுத்து மெனவும், வாமதேவம் வடக்குத் திக்கைக் குறிப்பதோடு வினைக்கீடான பயனைக் கூட்டுவிக்கு மெனவும், சத்யோஜாதம் தெற்கு முகத்தைக் காட்டுவதோடு அருளல் தன்மையையும் உணர்த்துகிறதென்றும் கூறுவர். இவற்ருேடு அதோ முகமும் தந்து முருகனை நமக்கு வழங்கினர் என்பதை விளக்குபவர்கள், ஒரு பொருளுக்கு மேற்கூறிய நான்கு திசைகளும் மேல் முகமும் இருப்பதோடு கீழ் முகம் திருவடியையும் தந்து அறுமுகங்களாக்கினர் என்பர்.

சிவபெருமானை விட ஆற்றல் மிக்கவரிலர். அவர் மலை திரண்டன்ன திண்தோளுடையவர். சூரபன்மனுக்குத் தம் ஆற்றல் முழுவதையும் தந்து தம் சக்தியைத் தவிர வேறு எவரும் அவனை அழிக்க முடியாது என்ற வரம் கொடுத்த தன்மையிலிருந்தே அவர் முழுமுதற் கடவுள், அவருக்கு மேலான தெய்வமில்லையென்று கூறலாம். யானை முதலிய வலிய மிருகங்களை மனிதன் அடக்கி விடுகிறான். எதனுல் அடக்க முடிகிறது? தன அறிவைக் கொண்டன்ருே அடக்குகிறான். எனவே சூரபன்மன் ஆற்றலை அடக்குவதற்

குச் சிவபெருமானின் ஞான சக்தியன்றோ வேண்டும். அவருடைய அதோ முகமென்பது அந்தர் முகமான ஞான சக்தியைக் குறிக்குமெனக் கொள்ளல் மிகவும் பொருத்தமானது.

மற்று முருகன் சிறு குழந்தையாயிருந்த போது பிரமனைச் சிறையிலடைத்துத் தானே சிருஷ்டித் தொழிலை மேற கொண்டார் எனக் கூறப்படுகிறது. "வேதத்தின் உண்மை புகன்றிலையால்; சிருஷ்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என முனம் குட்டிச் சிறை யிருத்தும் கோமானே!" என்று கலிவெண்பாவில் கூறப்படுகிறது. சூரபன்மன் ஆற்றல் மிகுந்தவனாயிருந்த போதிலும் அறியாமையால் அழிவைப் புரிந்து வந்தான். அறிவின்றி ஆற்றலிருப்பது அழிவுக்குக் காரணம். பிரமன் வேத உட்பொருளைத் தெரிந்து கொள்ளாது சிருஷ்டி செய்யும் மக்கள் அறிவில்லாதவர்களாய் அழிவைச் செய்வர். எனவே சூரபன்மன் போன்ற மக்களைச் சிருஷ்டிப்பதற்குக் காரணமான பிரமனைச் சிறையிலடைத்து விட்டுத் தாமே அறிவுள்ள மக்களைச் சிருஷ்டிக்கத் தொடங்கினார். சிறந்த வைத்தியர் நோய் நாடி நோயின் காரணத்தை நாடி முதலில் காரணத்தை அழித்துப் பின்னர் நோயைப் போக்க மருந்து கொடுப்பார். அது போலன்றோ, முருகப் பெருமான் சிருஷ்டியைச் சீர்ப்படுத்தி பின்னர் அதனால் விளைந்த தீமையைச் சீர்ப்படுத்த முற்படுகின்றார். எனவே 'வைத்திய நாதர்' என முருகனுக்கு ஒரு பெயர் வழங்கப்படுகிறது. குருமுகமாகப் பெற்ற அனுபவத்தையும் குருவினிடத்துக் கூறி தெளிவு படுத்திக் கொள்வது போல சிவபெருமானிடத்து முருகன் கூறியதை அவருக்கு உபதேசம் செய்ததாகக் கூறப்படுகிறது. சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமனை, குழந்தை வடிவிலிருக்கும் போதே சிறையிலடைத்ததைக் கண்ட சிவபெருமான், முருகனும் சூரனைப் போன்று தேவர்களுக்கின்னல் இழைப்பாரோ என்றஞ்சி அவரிடத்தில் அவர் பிரமனுக்கிழைத்த துன்பத்தின் காரணத்தை வினவ அதை முருகன் விளக்கியும் கூறியிருக்கலாம்.

சூரபன்மனையும் அவர் அழிக்கவில்லை. அறியாமை யோடு கூடியிருந்த அவனுடைய உயிரில் அறிவு விளக்கத்தை, ஞானவேல் கொண்டு, உண்டுபண்ணி உய்வித்தாரென்க. அவனிரு கூறுகச் சேவலும் மயிலுமாக நின்ற தத்துவம் — சேவல் ஒளியை நாடும் பட்சி, அறிவை உணர்த்திற்று; மயில் இருளை நாடும் பட்சி, அறியாமையை உணர்த்திற்று. எனவே சேவலைக் கொடியாகவும், மயிலை வாகனமாகவும் கொண்டு அவனுக்கு மரணமிலாப் பெருவாழ்வை யளித்தார் என்க. மற்றுமோர் உண்மை அதில் விளங்குவதைக் காணலாம். பின்வரும் பாடல் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் பாடியது :—

அறிவுதன் நினைவிற் கலந்துறு போதில்
அரும்பரம் உயிர்சகம் உளவாம்
மறிவிலவ் வறிவந் நினைவினை யகன்றுற்
பேதாபே தங்க ளொன் றின்றி
நெறியுறத் தானே தன்னிடத் திருக்கும்
நிச்சய மென்றெனக் கிசைத்தான்
பொறிமறு மார்பன் மருகவே ளெனையான்
போரிவாழ் ஆறுமா முகனே.

அறிவிலிருந்து நினைவு உண்டாகிறது. எப்படி ஆகாயத்தின் சலனத்தினுல் காற்று உண்டாகிறதோ அது போல அறிவின் சலனத்தினுல் நினைவுகள் அலைகள் போல் எழுந்து கொண்டிருக்கின்றன. இந்த நினைவினைப் பின் தொடர்ந்து எண்ணினுல் பரம், உயிர், சகம் உளவாம். அப்படிப் பின் தொடாது சாக்ஷி மாத்திரமாய் நின்றிடில அறிவுதானே தன்னிடத்து நிற்கும். அப்போது அறிவு பரன் நினைவொடு கூடிடும். சூரனை முருகன் இரு கூறுக்கி அவனுடைய அறிவை பரன் நினைவில் சேர்ப்பித்து, அவனுடைய பிறவியை வேரறுத்து அவனை உய்வித்தான், என்ற உண்மையையும் இந்த வரலாற்றில் காணலாம்.

மதிப்புரை

"சைவாநுட்டானவாதி" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். அநுட்டானம் என்பது மக்கள் யாவராலும் மேற்கொள்ளத்தக்கது. தூய்மை, ஒழுக்கமுறை, இறையுணர்வு ஆகியமூன்றும் அநுட்டான விதிமுறைகளில் யாண்டும் இலங்கியிருத்தல் கண்கூடு. ஆகவே அநுட்டான விதிமுறைகளை எல்லாரும் பயின்று பழக்கப்படுத்திக்கொள்ளல் நன்று. "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்னும் விலங்குணர்ச்சி மிக்கார்க்கு இத்தகைய விதிமுறைகள் வெறுக்கற்பாலனவாயிருக்கலாம். அவர்களைப்பற்றி இங்கு பேசவில்லை.

இங்கு குறிப்பிட்ட நூலில் மிகவும் நல்ல விளக்கங்களுடன் அநுட்டானமுறைகள் கூறப்பட்டுள்ளன. தியானத்திற்கப்பால் ஸ்தோத்திரம் என ஒரு பகுதி சேர்க்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. மேலும் சூரிய நமஸ்காரவிதி, கோ பூசா விதி, போசன விதி, குருவாக்கியப், அரும்பதப் பொருள் ஆகியவைகளும் பிற்சேர்க்கையாகச் சேர்க்கப்பட்டு இந்நூலின் பெருமைக்கு ஏற்றம் செய்கின்றன.

இந்நூல் சைவத்திருவாளர் கோவை. சி. பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. Sc. (Ag.) அவர்களது மணி விழா மலராகக் காஞ்சி தொண்டைமண்டலாதீன வெளியீடாக வெளிவந்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது. திரு. முதலியார் அவர்களின் மணிவிழா திருக்கடவூரில் 15-5-1968ல் நிகழ்ந்தஞான்று இது வழங்கப் பெற்றது. 84 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை குறிக்கப் பெறவில்லை. வேண்டுவோர் அஞ்சற்செலவு அனுப்பி "தலைவர், காஞ்சி தொண்டைமண்டலாதீனம், காஞ்சிபுரம்," என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். யாவரும் அநுட்டானத்தினை முறையே குருமுகமாயும் கற்று இந்நூல் மூலமாய் அதனைப் பழக்கத்திருத்தி வாழ்வில் வளம் பல பெற்றுய்வார்களாக.

(அம்பை)

"திருவெம்பாவையும் திருப்பள்ளி யெழுச்சியும்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது வயாவிளான் பலாலி சைவபரிபாலன சபையாரின் இலவச வெளியீடாக 5-1-1968ல் வெளியிடப் பெற்றுள்ளது.

இந்நூலில் ஈழநாட்டில் சைவம் வளர்க்கும் பல நிலையங்களுள் ஒன்றாக விளங்கும் ஸ்ரீ தம்பையா மடம் பற்றியும் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி விளக்கங்கள் பற்றியும் முன்னுரை, முகவுரைகள் முறையேகாணக் கிடைக்கின்றன.

மேலும் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் முப்பதும் பொழிப்புரையுடன் நன்முறையில் அச்சிடப் பட்டுள்ளன. பிற்சேர்க்கையாகத் தென்பலவைக் கூத்தப் பிரானைத் தெரியாதார்க்கு அறிமுகம் செய்துவைக்கும் வகையில் 10 ஆசிரிய விருத்தங்கள் உள்ளன. ஈழ நாட்டிலுள்ளோர் சமய வைக்கச் சிறப்பினை இந்நூலினைப் படிப்போர் தெற்றென வுணர்வர். இது இலவச வெளியீடாதலின் விலை குறிக்கப்பெறவில்லை அஞ்சற் செலவனுப்பி நூலினைப் பெற்றுக் கொள்ளலாம். நூல் கிடைக்குமிடம் :—

"செயலாளர், வயாவிளான்-பலாலி சைவ பரிபாலன சபை, பலாலி தெற்கு, வயாவிளான், சிலோன் என்பதாகும். யாவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக.

(அம்பை)

"சிவமஹிம்நஸ்தோத்திரம்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது புட்பதந்தமுனிவரால் வடமொழியில் சிவபெருமான் பெருமைபற்றிப் பாடிப் புகழும் நூலாகும். அதனைத் தமிழில் நல்ல தீஞ்சுவைப் பாக்களில் இயற்றிய பெருமை கோவை, கவியரசு, வித்துவான், ரு. நடேச கவுண்டர் B. O. L. அவர்களைச் சாரும்.

இந்நூலில் புட்பதந்த முனிவர் பெருமை, நூலின்கண் காணப்பெறும் 36 பாக்களில் பொதிந்துள்ள சிறப்புகள்

முதலியன இடம்பெற்றுள்ளன. இந்நூலைத் தம் திருமகனார் திரு. C. பாலசுபிரமணியத்தின் பிறந்தநாள் பரிசாகத் தமிழக மக்களுக்கு வழங்கும் பெருமை திரு. K சென்னியப்பக் கவுண்டர் அவர்களைச் சாரும். 44 பக்கங்கள் கொண்ட இந்நூல் இலவச வெளியீடாதலின் 20 காசுகள் அஞ்சல்தலை அனுப்பி இதனைப் பெற்றுக் கொள்ளலாம். நூல் வேண்டுவோர் " திரு கே. சென்னியப்பக்கவுண்டர், 'பத்மாலய நிதி' 55, கார்திபுரம் எட்டாவது வீதி, கோயமுத்தூர்–12." என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். யாவரும் படித்து எல்லாம் வல்ல சிவபரம் பொருளின் பெருமையறிந்தின்புற்று வாழ்வின் பயனைத் துய்ப்பார்களாக. (அம்பை)

ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும் குரு சிஷ்ய சம்பவ வரலாற்று வியாசமும் என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இதன் ஆசிரியர் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஆவர். இந்நூலில் சுப்பிரமணியப் பெருமான் குறித்து சீடன் எழுப்புவனவாக 97 வினாக்களும் அவற்றிற்கு விடையிறுக்கு முகத்தான் சுவாமிகள், ஆறுமுகப் பெருமான் சிறப்புக் குறித்து எழுதியிருக்கும் விளக்கங்களும் படிப்போர்க்கு ஞானக் கண்ணைத் திறக்க உறுதுணையாமென்பதுறுதி. பல நூல் மேற்கோள்களுடன் பகுத்தறிவுக்கேற்கும் நிலையில் கால நிலைக்கேற்ப மக்களுக்கு இறையன்பூட்ட சுவாமிகள் மேற்கொண்ட முயற்சி மிகவும் சிறப்புடைத்தாம். முருகப் பெருமானின் பல பெயர்களின் விளக்கங்களும், திருவிளையாடல்களும், அவனை நினைத்து மேற் கொள்ளும் நோன்பு பற்றிய விளக்கங்களும் பிறவும் இந்நூலில் யாங்கணும் சிறந்து விளங்குகின்றன. பிற்சேர்க்கையாக குரு சிஷ்ய சம்பவ வரலாற்று வியாசம் சேர்க்கப்பட்டுள்ளது. இது மூன்றாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. இதனை நன் முறையில் வெளியிட்டுதவியவர் ஸ்ரீமத் சுவாமிகளின் சீடர்களுள் ஒருவராகிய 'குமாரச் சிவம்' எனப் பெயரிய திரு. தா. வேங்கடாசல முதலியார்

ஆவர். சுவாமிகள் அருளிய நூல்கள் பலவற்றை அச்சு வாகன மேற்றி மக்களுக்குக் கிடைக்கச் செய்த பெருமை இப் பெரியாரையே சாரும். நல்ல அச்சு; 200 பக்கங்கள் கிரௌன் அளவில் கொண்ட இந்நூலின் விலை ரூ 2–50. யாவரும் வாங்கிப் படித்துப பயன் பெறுவார்களாக. நூல் கிடைக்குமிடம் :- தா. வேங்கடாசல முதலியார், 1/34, ஆபீஸ் வேங்கடாசல முதலித் தெரு, திருவல்லிக் கேணி, சென்னை-5. (அம்பை)

"நோயற்று வாழ ஐந்து வழிகள்" என்னும் நூல் ஒன்று வரப் பெற்ரும். ஐதராபாத் இயற்கை வைத் தியர் டாக்டர் ந. வெங்கட்ராவ் அவர்களின் 'ஆரோக்கி யத்திற்கான பஞ்ச தந்திரங்கள்' என்னும் நூலை அடிப் படையாகக் கொண்டு தமிழாக்கி யுதவியவர் திரு கி. சுப் பிரமணியம் ஆவர். இந்நூல் பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளதிலிருந்தே இதன் சிறப்பு நன்கு தெரிய வரும். பல பதிப்புக்களும் வெளி வந்தாயிற்று. திருமூலர், திருவள்ளுவர் அடிச்சுவட்டினை யொட்டி இப் பெரியார் இந்நூலை நன்முறையில் தமிழில் எழுதி யுதவி யுள்ளார். திருமந்திரம், திருக்குறள் மேற்கோள்களில் பிழைகள் காணப் பெறுகின்றன அவை களையப் பெறின் நலம் பயக்கும். இந்நூலில் ஆசிரியர் அளவறிந்துண்ணல், நன்னீர் பருகுதல், நல்லுடற் பயிற்சி, செலவன் கழலேத் தும் செல்வம் பெறல், வார மொருநாள் உண்ணு நோன்பு மேற் கொள்ளல் என்பவைகளைத் தக்க காரண காரியங்க ளுடன் விளக்கியுள்ளார். யாவரும் இந்நூலைப் படித்து உடலுரமும், உள்ள உரமும் பெற்றுய்வார்களாக. 48 பக்கங்கள் கொண்டது; (கிரௌன் அளவு) நல்ல அச்சு; விலை ரூ 0-50. வேண்டுவோர் : இயற்கை சிகிச்சை நிலை யம், 6, முதல் மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு என்ற முகவரியில் பெற்றுக் கொள்க. (அம்பை)

கும்பகோணம் ஸ்ரீ சாரங்க தேசிகேந்திர சுவாமிகள் பெரிய மடத்தில் சைவ சித்தாந்த சாத்திரக் கோடை வகுப்புத் துவக்க விழா 23-5-68 தேதி வியாழன் மாலை உபதலைவர் கரந்தைப் பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் வரவேற்புரை வழங்க, 'சித்தாந்தம்' ஆசிரியர் மு. அருணாசலம் அவர்கள் திருவியலூர் உய்யவந்த தேவர் அருளிச் செய்த 'திருவுந்தியார்' என்னும் நூல் வகுப்பைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவு நிகழ்த்த, திருவாவடுதுறை ஆதீன வித்வான் த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் வகுப்பை நடத்தினார்கள். வகுப்பு 23-5-68 தேதி முதல் 2-6-68 தேதி வரையில் 11 தினங்கள், தினசரி மாலை 7 1/2 மணிக்குத் துவங்கி 8 1/2 மணிக்கு முடிவுறும். மெய்யன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெற வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு காரியதரிசி ஆர். திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் நன்றி கூற இறை வாழ்த்துடன் வகுப்புத் துவக்க விழா நிறைவுற்றது.

புரசைத் திருநெறிக் கழக 87-ஆம் திங்கள் வழிபாடு 26-5-68 அன்று திருவளர்புரம், வட திருநாகேஸ்வரம், செவ்வடலி குன்றத்தூர் ஆகிய இடங்களில் சிறப்புற நிகழ்ந்தது.

டர்பனில் 37. டாபி வீதியில் உள்ள சைவ சித்தாந்த சங்கம் பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணிய குரு சுவாமிகளால் நிறுவப் பெற்றது. அதன் 23 ஆம் ஆண்டு விழா ஸ்ரீகருணையானந்த சுவாமிகள் தலைமையில் 26-5-68ல் காலை 11 மணிக்குச் சிறப்புற நிகழ்ந்தது. தென்னாப்பிரிக்காவில் வாழும் தமிழர்கள் தங்கள் சமயப் பற்றை இச்சங்கத்தின் மூலம் போற்றி வருவது கண்டு இன்புறுகிறோம். அவர்கள் சமயத் தொண்டு சிறப்பதாகுக.

(துணையாசிரியர்)

பூவாளூர்ச் சைவ சித்தாந்த சங்கத்தின் 58 ஆவது ஆண்டு விழா 2-6-68 அன்று சிறப்புற நிகழ்ந்தது. 3-6-68 முதல் 12-6-68 முடிய திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் சாத்திர வகுப்பைத் தொண்டை மண்டலாதீனம் சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் நடத்தியருளினார்கள். பல அன்பர்கள் கலந்து சாத்திர அறிவு விளக்கம் பெற்றது போற்றத்தக்கது.

திருமுறை இசை வழிபாட்டுச் சங்கத்தின் சார்பில் 2-6-68 அன்று பூக்கடை சென்ன மல்லீசுவரர் கோயிலில் காலை 8 மணியளவில் வழிபாடு நிகழ்ந்தது. அடுத்த மாத வழிபாடு 7-7-68 அன்று வடபழனி ஆண்டவர் கோயிலில் நிகழும். அன்பர்கள் யாவரும் கலந்து கொள்வார்களாக.

டாக்டர். குருசுவாமி முதலியார் தொண்டை மண்டலம் துளுவவேளாளர் உயர்பள்ளியில் கோடை வகுப்பு மூலம் 8-5-68 முதல் பெரிய புராணச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்திருந்தது போற்றத்தக்கது. திருவாளர் சே. த. இராமலிங்கம் பிள்ளை பி.ஏ., பி.டி., அவர்கள் சொற்பொழிவு களாற்றினர். பண்டித V. நடேசனார் அவர்கள் தொடக்கவுரை யாற்றினார்கள். சைவர்களால் நடத்தப் பெறும் பள்ளிகளில் இத்தகைய முயற்சிகளைப் பிற பள்ளி நிர்வாகத்தினரும் மேற் கொள்ள வேண்டுகிறோம். (துணையாசிரியர்)

திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் திருமுறை விழா 3-6-68 முதல் 7-6-68 முடிய நிகழ்ந்தது. பல சைவப் புலவர் பெரு மக்கள் பங்கு கொண்டு சமயச் சொற்பொழிவுகளாற்றினர்

7-6-68 அன்று சங்கத்தின் முதலாண்டு விழாக் கூட்டம் நிகழ்ந்தது. 8-6-68 அன்று விசாகப் பெருவிழா மிகப் பெருஞ் சிறப்புடன் நிறைவேறியது. இவற்றிற்கெல்லாம் மூல காரணமாயிருக்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சீரிய முயற்சியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

திருப்போரூர் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள் 309 ஆம் ஆண்டு குரு பூசை விழா 8-6-68 சனியன்று சிறப்புற நிகழ்ந்தது. பகலில் மகேசுவர பூசையும், இரவு திருவீதியுலாவும் நிகழ்ந்தன.

நம் சமாஜ உறுப்பினர் R. தங்கண்ணன் அவர்களின் அருமைச் செல்வி திருமதி யுவராணிக்கும், துறையூர் வெங்கடாசலபுரம் பி. ஆர் பிச்சைக் கவுண்டர் திருமகன் பி. பெருமாள் பி.எஸ்ஸிக்கும் (போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், குத்தாலம்) 1-5-68 அன்று திருவரங்கம் அரங்க பவனத்தில் திருமணம் சிறப்புற நிகழ்ந்தது.

புது மணமக்கள் எல்லா நற்பேறுகளும் பெற்று நீடினிது வாழ அம்பலவாணர் அடியிணைகளை இறைஞ்சி அருள் புரியுமாறு வேண்டுகின்றோம்.

ஆனித் திங்கட் சிறப்பு நாள்கள்

6 (19-6-68) இரேவதி - ஏயர்கோன் கலிக்காம நாயனார் விழா

17 (30-6-68) மகம் - மாணிக்கவாசக சுவாமிகள் விழா

18 (1-7-68) பூரம் - அமர்நீதி நாயனார் விழா